

Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14
வேணு : 18 | ஜூலை 2013 | கானம் : 12



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME




வேணு : 18 | ஜூலை 2013 | கானம் : 12

Delivered by India Post www.indiapost.gov.in

Please Renew / Start your Subscription













Please Renew / Start your Subscription



மே 19 முதல் 25 – ஆஸ்திரேலியா மெல்போர்னில் – ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் – பூர்ணிமாஜீ உபன்யாசம்



ஜூன் 1 – கோவிந்தபுரம் பகவன்னாம போதேந்திராள் ஔஷதாலயத்தில்





ஜூன் 9 – சென்னை பாரத்திதாசன் காலனி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவில் கும்பாபிஷேக வார்ஷிக உத்ஸவத்தில்



ஜூன் 24 – ஆம்பூரில் சத்சங்கம்



Please Renew / Start your Subscription


















Please Renew / Start your Subscription

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 18 ஜுலை 2013 கானம்: 12

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 208 | 03 | பகவானின் தரிசனம் | 18 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 09 | ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 25 |
| பாகவதபழம் –ஸ்கந்தம்2 / 2 | 11 | பாலகர்களுக்கு ஒரு கதை | 32 |
| மனதை எப்படி பொசுக்குவது | 15 | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 38 |
| சான்னித்யமும் நவக்ரஹமும் | 16 | மாலே மணிவண்ணா | 40 |
| என்ன பிறவி வரும்? | 17 | அப்பாலுக்கு அப்பால் | 42 |


பிறர் குற்றம் நாடாதே; உன்னை பார்; தினம் இரவில் படுக்கும்போது காலையில் இருந்து இரவு வரை, நான் என்ன செய்தேன்; பிறருக்காக என்ன செய்தேன்; என்னுடைய ஆன்மீக வளர்ச்சிக்காக என்ன செய்தேன்; நான் செய்த கர்மங்களால் மற்றவர்களுக்கு என்ன தீமை விளைந்தது; என் செயலால் யார் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள்; இதை நீ விசாரணை செய். இந்த மாதிரி விசாரணை பண்ணினால், மறுநாளில் இருந்து அந்த தவறுகளை செய்ய மாட்டோம். நாம் இந்த மாதிரி விசாரணை பண்ணுவது, நமக்கு வழிகாட்டியாக இருக்கும். நாம் இது மாதிரி விசாரணை பண்ணுவதற்கு தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த மனப்பக்குவம் வர வேண்டும். அதற்கு குருமூர்த்தியின் அருள் வேண்டும்.

– தபோவனம் ஸ்ரீஞானாநந்தகிரி ஸ்வாமிகள்

Please Renew / Start your Subscription

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் : அடாணா                    தாளம் : ஆதி

பல்லவி

நரஜன்மம் அடைந்ததே நரகத்தில் வீழ்வதற்கோ

அனுபல்லவி

அரனும் வழிபடும் நாரணன் தாள் பற்றி
மறவாமல் மறுவாழ்வு தேடிக் கொள்வாயே

சரணங்கள்

1. அஹம்பாவம் கொள்ளாதே, அறவழி தவறாதே
கலகம் செய்யாதே, பிறர் மனை நோக்காதே
உயிரினை கொல்லாதே, வாய்மையை மறவாதே
சோம்பியிருந்து வயிற்றினை வளர்க்காதே
2. ஈதலை மறக்காதே, இரக்கத்தை விட்டு விடாதே
மதுவையும் மயக்கத்தையும் கை கொள்ளாதே
பிறரை வஞ்சிக்காதே, துரோகம் செய்யாதே
தம்பதிகளை நண்பர்களை பிரிக்கவே பிரிக்காதே
3. கற்பினை மறவாதே, அற்ப சுகத்தில் வீழாதே
தாயையும் சேயையும் பிரிக்கவே பிரிக்காதே
அன்பில்லாமல் பிறரை துன்புறுத்தாதே
கடுஞ்சொல் சொல்லி சுட்டெரிக்காதே
4. நன்றி மறவாதே, நாத்திகம் பேசாதே
நல்லோர்கள் அல்லோருடன் சேரவே சேராதே
கல்லார்க்கும் கற்றோர்க்கும் ஏற்ற தெய்வமாம்
முரளீதரனை மறக்கவே மறக்காதே



Please Renew / Start your Subscription

# மதுரமான
# மஹனீயர் – 208

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

குருநாதரின் பிரதம தரிசனம் என்பது ஒவ்வொரு அன்பருக்கும் வாழ்வின் வெவ்வேறு சமயங்களில், வெவ்வேறு வழிகளில் ஏற்படும். எண்ணற்ற பக்தர்கள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளை தொலைக்காட்சி/ ஒலித்தட்டு மூலம் கேட்டு, அவரை தரிசனம் செய்து அனுக்ரஹம் பெற்று வருவது நமக்கு தெரியும். ஒரு குரு தனது அழகான பேச்சினாலேயும் அருளிசெயல்களாலேயுமே தனது பக்தர்களை ஆட்கொள்வார் என்று வால்மீகி இராமாயணத்தில் "வாக்விதாம்வரம்" என்று வரும் முதல் ஸ்லோகமே சொல்கிறது என்று குருநாதரே கூட அழகாக சுட்டிக்காட்டுவார்கள். அப்படி ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அக்ஷரமணமாலை ப்ரவசனங்களைக் கேட்டு அவர்பால் ஈர்க்கப்பட்ட பல அன்பர்களில் ஒருவர் திரு.நாராயணன்.

நமது ஸத்ஸங்கத்து நாராயணன் பல வருடங்களுக்கு முன் பெங்களூரில் ஒரு MultiNational நிறுவனத்தில் பணி புரிந்து வரும்பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ப்ரவசனங்களைக் கேட்டு பரவசமுற்றார். 2001இல், அவரது குடும்பத்தினர் அனைவரும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கருணைக்கு பாத்திரமாயினர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பெற்றோர் குழந்தையை பார்த்துக் கொள்வதற்கும் பல மடங்கு மேலாக, நாராயணனைப் பார்த்துக்கொண்டார்கள். நாராயணன், விடுமுறை நாட்களில், பெங்களூரிலிருந்து மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு குருநாதரின் தரிசனத்திற்காக வருவார். அப்பொழுது திரும்பிச் செல்வதற்குக் கூட நம் குருநாதர் யாரையாவது துணைக்கு அனுப்பி வைப்பார்கள். ஒரு சமயம், வேலை நிமித்தமாக, நாராயணனுக்கு அமெரிக்கா செல்ல வேண்டி வந்தது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் இதைத் தெரிவித்து, தனக்கு குருநாதரின் அருகாமையை விட்டு செல்ல இஷ்டமே இல்லை என்பதை தெரிவித்த பொழுது, அவரோ "இனிமேல் எல்லா சத்ஸங்கமும் அமெரிக்காவில்தான்.



Please Renew / Start your Subscription

க்ஷேமமாக போய் வா" என்று சிரித்துக் கொண்டே விளையாட்டு போல் சொல்லி ப்ரஸாதம் அருளினார்கள். தன்னை சமாதானம் செய்வதற்கே இவ்வாறு கூறினார்கள் என்று நினைத்துக் கொண்டே, ஒரு விதமாக அமெரிக்கா பயணமானார் நாராயணன்.

அமெரிக்காவில் தனது வேலையில் இருந்துகொண்டே, நேரம் கிடைத்த பொழுது தான் தங்கும் இடத்திலேயே மஹாமந்திர கீர்த்தனமும் ஸத்ஸங்கமும் நடத்தி வந்தார் நாராயணன். அப்பொழுதும் அடிக்கடி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பல வகையிலும், பெற்றோர் மற்றும் சத்ஸங்க அன்பர்கள் மூலமாக நாராயணனின் நலனை விசாரித்துக்கொண்டே இருப்பார்கள்.

ஒரு சமயம், நாராயணன் வேலை செய்யும் கம்பெனியில் இக்கட்டான நிலை வந்தது. அமெரிக்காவில் இரண்டு மாதங்களாக சம்பளமும் இல்லாமல், இன்ஷுரன்ஸும் இல்லாமல், ஒரு இக்கட்டான நிலையில் மாட்டிக்கொண்டார் அவர். சம்பளம் இல்லாமல் வேலையைத் தொடர்ந்து செய்யலாம் அல்லது எல்லாவற்றையும் விட்டுவிட்டு திரும்பி வரலாம் என்ற நெருக்கடி நேர்ந்தது. குருநாதர் என்ன சொல்கிறார்கள் என அவரிடம் தொடர்பு கொண்டபொழுது, அவரே அன்பர் மூலம், ஒன்றும் சொல்லாமலே, இவ்விவரம் பற்றி கேட்டு இருக்கிறார்கள். அதை கேள்விப்பட்டு நாராயணனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. மேலும் குருநாதரே, "ஏன் கவலைப்படுகிறாய். ஸ்ரீப்ரேமிகவரதன் உன்னைக் கைவிடவே மாட்டான். அவன் புகழை பரப்பும் உன்னை காப்பாற்றுவது அவனது பொறுப்பு" என்று தகவல் சொல்லி இருக்கிறார்கள். மறுநாளே கஷ்டம் தீர்ந்து அதிகமான சம்பளத்துடனும், மேலும் நிரந்தரமான வேலையும் நாராயணனுக்குக் கிட்டியது!

நாராயணனின் பெற்றோர்கள், மஹாரண்யம் கிராமத்தில் மதுரபுரி ஆஸ்ரமத்தின் அருகாமையிலேயே வசித்து வருகின்றனர். தங்களுக்கு ஏற்ற வகையில் ப்ரேமிக வரதனுக்கு கைங்கர்யம் செய்து வருகின்றனர். ஒரு நாள் அவரது தந்தைக்கு திடீரென்று எதிர்பாராமல் மார்பில் வலி ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அவசரமாக அழைத்து செல்லப்பட்டார். பரிசோதித்த மருத்துவர்கள் இருதய இரத்த குழாய்களில்



Please Renew / Start your Subscription

அடைப்பு இருப்பதாகவும், ஆஞ்சியோப்ளாஸ்டி என்னும் சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் கூறினர். அமெரிக்காவில் இருந்த நாராயணன், சாதாரணமாக மிகவும் திடமாக இருக்கும் தனது தந்தையின் இந்நிலையை கேட்டு பதட்டம் அடைந்தார். உடனே கிளம்பி வரத்தயாரானார். குருநாதரோ தாமாகவே, "இது இந்த காலத்தில் ஒரு மிகவும் சாதாரணமான சிகிச்சைதான். நான் இருக்கிறேன் அல்லவா? எதைப்பற்றியும் கவலைப்படாமல், நீ வேலையில் கவனத்தை செலுத்து" என்று நாராயணனிடம் என்னை தகவல் தெரிவிக்க சொன்னார்கள். குருநாதர், தாமே அவர் தகப்பனாருடன் எப்பொழுதும் கூடவே இருக்கிறேன் என்றும் சொல்ல சொன்னதால், நாராயணனின் கவலை விலகியது. விரைவில் சிகிச்சை முடிந்து நலமாக வீடு திரும்பிய அவர் தகப்பனார், தொலைபேசியில் நாராயணனிடம் "எனக்கு அறுவை சிகிச்சை செய்த கார்டியாலஜிஸ்டின் பெயர் டாக்டர் முரளீதரன்" என்று சொல்ல நாராயணன் ஆச்சரியப்பட்டு போனார். ஏனெனில் குருநாதரின் திருநாமமும் அதுதானே! குருநாதரின் அருளினால், நமது சத்ஸங்கத்திலேயே ஒரு நல்ல சம்பந்தத்தில் நாராயணனுக்கு திருமணமும் நடந்து முடிந்தது. ஈன்றிடும் அன்னையை விட பல ஆயிரம் மடங்கு அதிகம் அன்பு செலுத்துபவர் குரு என்று மஹான்கள் பாடி இருக்கின்றனரே!

நாராயணன் ஒவ்வொரு வருடமும் குருநாதரின் திருநக்ஷத்திரத்தின் பொழுது, இந்தியா வரும் வழக்கம் கொண்டவர். 2006இல் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலிதர்ம உந்தியார் எனும் நாமத்தின் உயர்வை சொல்லும் அழகான கீர்த்தனத்தை இயற்றி இருந்தார்கள். அவ்வருடம் நவம்பர் மாதம் 8ஆம் தேதியன்றுதான் இப்பொழுது மதுரபுரி ஆஸ்ரமத்தில் தினம் அகண்டமாக காலை 6 முதல் மாலை 6வரை நடக்கும் மஹாமந்திர கீர்த்தனையை ஸ்ரீஸ்வாமிஜி துவக்கி வைத்தார்கள். அப்பொழுது அருகே இருக்கும் பெரும் பேற்றை நானும், ஹரிஜியும், நாராயணனும், அன்பர்களும் பெற்றோம். அப்பொழுது நமது ஸத்ஸங்க அன்பர் ஜகன்னாதனும் அமெரிக்காவிலிருந்து வந்திருந்தார். அப்பொழுதுதான் என்னையும் நாராயணனையும் ஜகன்னாதனையும் அழைத்து குருநாதர், பகவானை அடைவிக்கும் பல்வேறு மார்க்கங்களை



Please Renew / Start your Subscription

பற்றி விரிவாக பேசலானார்கள். அவை அனைத்தும் பகவானிடம் நிச்சயம் கொண்டு சேர்ப்பவையே என்றும் அதன் விவரங்களை பற்றியும் அழகாக பேசலானார்கள்.

இடையே "உங்களையே எடுத்து கொள்ளுங்கள். வெளிநாடு சென்று பல விதத்திலும் உழைக்க வேண்டி உள்ளது. சிலரோ அன்றாடம் வேலை செய்தால்தான் அவர்களுக்கு வயிற்று பிழைப்பே நடக்கும். இப்படிப்பட்ட இயந்திர கதியான வாழ்க்கையில், எல்லோருக்கும் எல்லாவித மொழி, இனம், தேசத்தை சேர்ந்தவருக்கும், விலங்கு, பறவை, புல், பூண்டு என அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மை தருவதாகவும் இறைவனிடம் கொண்டு சேர்க்க வல்லதாகவும் உள்ள மிக சுலபமான ஒரு மார்க்கம் நாமகீர்த்தனம்தான்" என்றார்கள்.

மேலும், "ஸனாதன தர்மம் என்றால் என்ன என்று தெரியுமா?" என்று கேட்டார்கள். நாங்கள் அமைதியாக இருக்கவே, "தொன்று தொட்டு வருவதும், என்றும், எப்பொழுதும் இருப்பதுதான் ஸனாதனம். நாம ஸங்கீர்த்தனம் ஒன்றுதான் எங்கும் எப்பொழுதும் எல்லோருக்கும் பொருந்தும். அதுதான் உண்மையான உலகளாவிய ஸனாதன தர்மம்" என்று சொன்னார்கள். விளையாட்டாக இப்படி பேசிக்கொண்டே போனவர் சட்டென சீரியசாக பேசலானார்கள். எங்களிடம் உலக வரைபடத்தை எடுக்கச்சொல்லி, அதிலுள்ள எல்லா நாடுகளைப் பற்றியும், அவற்றின் மக்கள் தொகை, பேசப்படும் மொழிகள், மதங்கள், இவற்றைப்பற்றி எல்லாம் கேட்டார்கள். பதில் சரியாக வராததால், "நீங்கள் நாளை பாக்யநாதன் வீட்டுக்கு சென்று, அங்கு இன்டெர்நெட் மூலமாக உலகநாடுகளை பற்றிய எல்லா விவரங்களையும் சேகரித்து, எனக்கு கொண்டு வந்து தர வேண்டும்" என்றார்கள். எதற்கென தெரியாவிடினும் குருநாதர் கேட்கிறார்கள் என்பதால், பல தகவல்களை சேகரித்துக் கொண்டு சென்றோம்.

"நாமகீர்த்தனம் இவ்வளவு நாடுகளுக்கும் செல்ல வேண்டும். அதுதான் பெரியவர்கள் காட்டிய பாதை. இது நடக்க போகிறது என்று மஹான்கள் சொல்லி இருக்கின்றனர். அதுதான் என் ஆசையும் கூட" என்று அன்றே சொன்னார்கள். இன்று நமது



Please Renew / Start your Subscription

ஸத்ஸங்கம் உலகெங்கிலும் பல நாடுகளில் பரவி இருப்பதைப் பார்க்கும்பொழுதுதான், பல வருடங்களுக்கு முன்னரே, குருநாதர் கொண்டிருந்த தொலைநோக்குப் பார்வையையும் திவ்ய சங்கல்பத்தையும் ஓரளவு உணர முடிகிறது!

அப்பொழுது முதல் உலகெங்கிலும் ஸத்ஸங்கங்கள் பல தொடங்கப்பட்டன. குறிப்பாக, அமெரிக்காவில் "G.O.D USA" என்னும் அமைப்பு நிறுவப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் ராமுஜி மற்றும் பூர்ணிமாஜி அமெரிக்காவிற்கு ஸத்ஸங்க சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். 25ற்கும் மேற்பட்ட ஊர்களில் மஹாமந்திர ஸத்ஸங்கங்கள் துவங்கப்பட்டன. நூற்றுக் கணக்கான அமெரிக்கா வாழ் மக்கள் மஹாமந்திர கீர்த்தனத்தை தினப்படி சொல்ல ஆரம்பித்தனர். அச்சமயம் ஒருநாள் குருநாதர், நாராயணன் மற்றும் அமெரிக்க ஸத்ஸங்க அன்பர்களிடம், "அமெரிக்காவில் ஒரு நாமத்வார் வரப்போகிறது என்றும் உடனடியாக ஒரு இடம் பார்க்கவும்" தகவல் தெரிவித்து இருந்தார்கள். எப்படித் தொடங்குவது என்று ஒன்றும் புரியாமல் குழம்புகையில், அவரே வழியும் காண்பித்தார்! டெக்ஸாஸ் மாநிலத்தில் இடம் பார்க்கும்படி கூறினார்கள். இது குழப்பத்தை இன்னும் அதிகரித்தது! காரணம் - அச்சமயத்தில் டெக்ஸாஸ் மாநிலத்தில் ஒரு ஸத்ஸங்க அன்பர்கூட இல்லை என்பதே!

குருநாதரின் கிருபையினால் ஸ்ரீஜீவன்-ஸ்ரீமதி லக்ஷ்மி தம்பதிகள், டெக்ஸாஸின் ஹூஸ்டன் மாவட்டத்தில் இருந்து தானாகவேயும், ஸ்ரீஸ்ரீராம்-ஸ்ரீமதி நிஷா தம்பதியினரும் நமது ஸத் ஸங்கத்திற்கு வந்தார்கள். நாமத்வாருக்காக தகுந்த இடத்தை தேடிக்கொண்டிருக்கும் பொழுதே, 2008ல் குரு பூர்ணிமா அன்று பெங்களூரில், தமது ப்ரவசனத்தின் பொழுது, குருநாதர், டெக் ஸாஸ் மாநிலத்தில் இரண்டு ஏக்கர் நிலம் வாங்கிவிட்டதாகவே சொன்னார்கள்!

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சொன்னது போல், டெக்ஸாஸில் ஹூஸ்டன் நகரருகில் மான்வெல் எனும் அழகான நகரில் இரண்டு ஏக்கர் பரப்பில் நமக்காகவே ஏற்பட்டது போல, கட்டிடத்துடன் இடம் அமைந்தது. 2010 பிப்ரவரி 14 அன்று, குருநாதரின் பூரண அருளாசிகளுடன் நாமப்ரவேசம் நடந்தது. அந்நிகழ்ச்சியில், குருநாதர் தொலைபேசி வாயிலாக அருளுகையில், அன்று தன்



Please Renew / Start your Subscription

வாழ்வின் மிக ஆனந்தமான நாள் என்றும், தனது கனவு அன்று பலிதம் ஆனதாகவும் கூறி மகிழ்ந்தார்கள். நாமத்வாருக்குள் மனதில் கவலையுடனும் ப்ரார்த்தனைகளுடனும் வரும் அனைத்து உள்ளங்களுக்கும் அமைதி, சந்தோஷம் மற்றும் செழிப்பானது ஏற்படும்" என்றும் அருளினார்கள்.

இன்று இந்த நாமத்வார் டெக்ஸாஸிற்கும், அமெரிக்க நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு தெய்வீக சக்தியாக திகழ்கிறது. நூற்றுக்கணக்காணவர்கள் இங்கு மஹாமந்திர கீர்த்தனம் செய்கிறார்கள். பிரதி மாதம் அகண்ட நாமகீர்த்தனம், பிரதிவருடம் ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு என உத்ஸவங்கள், பாகவத பாராயணங்கள் என அனைத்திலும் நாடெங்கிலும் இருந்து பக்தர்கள் பங்கேற்கிறார்கள். கோபகுடீர, பாகவத வகுப்புகள் நடைபெறுகின்றன. புற்று நோய், மன நோய் மற்றும் இதர நோய்களிலிருந்து குணம், வேலை இல்லாதவர்களுக்கு வேலை என்று குருக்ருபையை, இந்த நாமத்வார் அமெரிக்க மக்களுக்கு ஒரு பூலோக கல்பக வ்ருக்ஷம் போல வழங்கி வருகிறது. இன்று நாம் அன்றாடம் சென்று பார்க்கும், Namadwaar.org இணையதளத்தின் Administrator நம் நாராயணன்தான்.

அமெரிக்க ஹூஸ்டன் நாமத்வாரை அர்ப்பணிப்பதற்காக Mayor of Manvel Ms Delores Martinஐ கூப்பிடுவது என்று முடிவாகியது. ராமுஜி அப்பொழுது அமெரிக்காவில் இருந்தார். இந்த விழா முடிந்து இந்தியா திரும்பலாம் என்று குருநாதர் சொல்லி இருந்ததால், மார்ச் 1 வரை விசாவை நீட்டித்திருந்தார் அவர். மேயரை கூப்பிட்ட பொழுது, அவரோ தாம் பிப்ரவரி 28 அன்றுதான் வர முடியும் என்று சொல்லி விட்டார். குருநாதரை ராமுஜி தொடர்பு கொண்டு கேட்க, குருநாதரோ "அன்றே நடக்கட்டும். அது மிக சிறப்பான தினம்" என்றார்கள். அப்பொழுது ஒன்றும் புரியவில்லை. ஆனால் விழா மேயர் பங்கேற்க, குருநாதர் அருளால் அழகாக நடந்து முடிந்தது. அன்றுதான் மஹாமந்திரத்திற்கென அமைந்த ஹூஸ்டன் நாமத்வார் அர்ப்பணிக்கப்பட்ட தினம். ஒரு ஆச்சரியம் பாருங்கள்! அன்றுதான் மஹாமந்திரத்திற்கெனவே வாழ்ந்த சைதன்யரின் அவதார தினம்! இப்படி அமைந்தது குருநாதர் கிருபைதான் என்று சொல்வதை விட, வேறு என்னவென்று சொல்ல முடியும்!



Please Renew / Start your Subscription



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: நான் சமீபத்தில், ஒரு நாட்டிற்கு சென்றிருந்தேன். அந்த நாட்டில் நான் பலரை சந்தித்தேன். அவர்களிடம், நீங்கள் எந்த மதத்தை பின்பற்றுகிறீர்கள் என்று கேட்டேன். அதில் பெரும்பாலோர், நாங்கள் எந்த மதத்தையும் பின்பற்றுவதில்லை என்று கூறினார்கள். அதாவது **"They belong to No religion"** என்று கூறினார்கள்.

பதில்: **"No Religion is also another Religion only".** எந்த ஒரு மத கொள்கைகளையும் பின்பற்றாததும் ஒரு மதம்தான்.

கேள்வி: இறைவனின் தரிசனத்திற்காக சாதனை செய்யும் ஒருவர், வெகு விரைவில் இறைவனை அடைவார் என்பதை, எதை கொண்டு உணரலாம்?

பதில்: இறைவனை அடைவதற்காக சாதனை செய்யும் ஒருவர், அதில் ஏற்படும் தடைகளையும், சிரமங்களையும் கூட, ஆனந்தத்துடன் ஏற்று கொள்பவராக இருந்தால், அவர் வெகு விரைவில் இறை தரிசனம் பெறுவார். அதை ஒரு சுமையாக நினைப்பவர், அவ்வளவு எளிதில் இறை தரிசனம் பெற மாட்டார்.

கேள்வி: தியானம் செய்பவர்கள் தனிமையில் வாழ வேண்டியதன் அவசியம் என்ன?

பதில்: நம் வீட்டிலோ அல்லது அருகிலோ சாக்கடை இருக்கும். அதில் இருந்து தினமும் துர்நாற்றம் வந்த போதிலும், அதை சுத்தம் செய்ய ஆரம்பிக்கும்பொழுது அதை கிளறுவோம். அப்பொழுது அதில் இருந்து துர்நாற்றம் அதிகமாக வரும். அதுபோல்தான் மனதை பற்றி நாம் லட்சியம் செய்யாமல், அன்றாட அலுவல்களில் ஈடுபட்டிருப்போம். அப்பொழுது நாம் அடையும் மன வேதனையை விட, மனதை அடக்க முற்படும்பொழுது அதிலிருந்து பல சிந்தனைகள், பல பழைய பதிவுகள்



Please Renew / Start your Subscription

எதிர்மறையான எண்ணங்கள், குழப்பங்கள் எல்லாம் கிளம்பும். அதைர்யம் அடைய கூடாது. தொடர்ந்து, இறைவனுடைய அருளுடன் முயற்சி செய்து வந்தால், மனம் வசப்படும். அப்படி மனதிலிருந்து எண்ணங்கள் கிளம்புவதை கவனித்து பார்த்தால், சமீபத்திய ஓரிரண்டு வருடத்து பதிவுகள்தான், அதிகமாக வரும். அதனால்தான், நாம் தனிமையில் ஓரிரு வருடங்கள் இருந்து, மனதில் அதிகமான விஷய பதிவுகள் இல்லாமல் பார்த்து கொள்ள வேண்டும். அப்படி பார்த்து கொண்டோமானால், மனதை அடக்க முற்படும்பொழுது, அதிகமான எண்ணங்கள் கிளம்பாமல் இருக்கும்.

கேள்வி: என் மனதில் சாந்தியே இல்லையே? என்ன செய்வது?

பதில்: மனதில் சாந்தி வேண்டுமானால், ஐம்புலன்களும் அடங்க வேண்டும். ஐம்புலன்களும் விஷய சுகங்களுக்காக தவித்து இருக்கும் வரை, மனது அடங்காது. மனது அடங்காமல் இருந்தால், சாந்தி கிடைக்காது. மஹான்களின் சன்னதியில் ஐம்புலன்களும் அடங்கி இருப்பதால், நமக்கு தற்காலிகமாக சாந்தி கிடைக்கிறது.

**ஒருவன் தனிமையில் அமர்ந்து தனக்கு பிடித்தமான நாட்டிற்கு உல்லாச பயணம் செல்வது போலவும், அங்கு போய் மகிழ்ச்சியாக பல இடங்களில் சுற்றி அலைவது போலவும், கற்பனையில் மூழ்கி இருந்தான். மற்றொருவன் அவனை எழுப்பி இப்படியாக கற்பனை செய்வதால் என்ன பலன்? உண்மையில் அனுபவித்தால்தான் சுகம் என்றான்.**

**நாமும் இது சரிதானே, என்றுதானே நினைக்கின்றோம்.**

**உண்மை என்னவென்றால், நாம் நிஜத்தில், ஒரு சுகத்தை அனுபவித்தாலும் கூட, அது மனதின் கற்பனையே ஆகும். ஆகவே மனதினால் அனுபவிக்கும், நிஜ பிரபஞ்ச அனுபவத்தில் இருக்கும் ஆசையையும் தள்ளி விட்டு, நிஜ ஆனந்த ஸ்வரூபமான ஆத்ம ஸ்வரூபத்தில் நிற்க வேண்டும்.**

**- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**



Please Renew / Start your Subscription



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 1

–ஸ்ரீஸ்வாமிஜி 2



பரீக்ஷித்து பகவானுடைய கிருபையால் அங்கு வந்து சேர்ந்த சுகப்பரும்மத்தை சேவித்தான். அவரைச் சேவித்து, "மனிதர்களாக பிறந்தவர்களால் அவசியம் கேட்க வேண்டியது எது? அவசியம் ஜபம் செய்ய வேண்டியது எது? அவன் செய்ய வேண்டிய செயல்கள் என்ன? அவன் மனதினால் எவைகளை நினைக்க வேண்டும்? அவன் பஜனம் செய்ய வேண்டியது என்ன? மற்றும் எதைச் செய்வதால், மேலே செய்யக்கூடியவைகள் எல்லாம் பலனளிக்காமல் போய்விடுமோ அவைகளைச் சொல்லி அருள வேண்டும்" என்று சரியான ஆறு கேள்விகளைக் கேட்டு முடித்தான்.

வரீயானேஷ தே ப்ரச்ன: க்ருதோ லோகஹிதோ ந்ருப
ஆத்மவித்ஸம்மத: பும்ஸாம் ச்ரோதவ்யாதிஷு ய:பர: 2:1:1

இப்படி பரீக்ஷித்து கேட்டவுடன், சுகர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. மஹான்களிடம் சென்று தங்களுடைய கஷ்ட நிவர்த்தியை வேண்டுபவர்கள் உண்டு. தங்களுடைய க்ஷேமத்தை வேண்டுபவர்கள் உண்டு.

யார் வந்தாலும் சலிக்காமல், காரணமில்லாமல், கிருபை செய்து வரும் அந்த ஞானிக்கு உண்மையான வைராக்கியத்துடன் ஞானத்தை விரும்பி ஒருவர்கூட நம்மிடம் வரவில்லையே என்ற குறை இருக்கத்தானே செய்யும். ராஜ சுகங்களை அனுபவித்து வந்த ஒருவன், எல்லாவற்றையும் ஒரு கணத்தில் உதறிவிட்டு ஓடோடி வந்து, ஞானத்தை அடைய கேள்வி கேட்ட மாத்திரத்தில், சுகப்பிரும்மத்திற்கு சந்தோஷம் ஏற்பட்டது.

இப்படி ஒரு கேள்வி கேட்ட பரீக்ஷித்தை கொண்டாடலானார். "நீ கேட்ட கேள்வியால், நீ மட்டும் பலன் பெறப் போவதில்லை. உலகம் உள்ள வரையில், உள்ள மக்கள்



Please Renew / Start your Subscription

எல்லாம் பயன் பெறப் போகின்றார்கள். அதோடு மட்டும் அல்லாமல், ஆத்ம ஞானிகள் எல்லாம் நீ கேட்ட கேள்வியை அறிந்து உன்னைக் கொண்டாடப் போகின்றார்கள்.

அர்ஜுனன் அன்று போர்க்களத்தில் கேட்ட கேள்விகளுக்கு, பகவான் அளித்த பதில்கள்தானே பகவத்கீதை. அது இன்றுவரையில், உலகத்தில் உள்ளவர்க்கெல்லாம், எப்படி ஒரு சாந்தியைக் கொடுத்து வருகின்றதோ, அதுபோல் நீ கேட்ட கேள்வியும்!" என்று கொண்டாடினார்.

ச்ரோதவ்யாதீனி ராஜேந்த்ர ந்ருணாம் ஸந்தி ஸஹஸ்ரஸ:
அபச்யதாமாத்ம தத்வம் க்ருஹேஷ க்ருஹமேதிநாம் 2:1:2

ஆத்மாவைப் பற்றி அறியாமல் உலக வாழ்க்கையில் உழன்று கொண்டிருப்பவர்களுக்கோ கேட்பதற்கு கேள்விகள் ஆயிரக்கணக்கில் உள்ளது. எனக்கு எப்பொழுது குழந்தை பிறக்கும்? பிறக்கும் என்றால் எப்பொழுது பிறக்கும்? சீக்கிரம் என்றால் எவ்வளவு வருடத்தில்? ஒரு வருடத்தில் என்றால், ஆணா, பெண்ணா? பெண் என்று சொன்னால், ஏன் ஆண் குழந்தை பிறக்காதா? பிறகு பிறக்கும், கவலைப்படாதே என்று சொன்னால் சுகப்பிரசவம் ஆகுமா? ஆகும் என்றால் நல்ல நட்சத்திரத்தில் பிறக்குமா? பாருங்கள்! இப்படி ஆரம்பித்துக் கேட்டுக்கொண்டே போவார்கள் உலகியல்பாளர்கள்.

ஆனால், முக்தியில் ஆசை உள்ளவர்களுக்கோ கேட்பதற்கு ஒரே கேள்விதான். ஒருசமயம் ஜீவன் முக்தரான ஸ்ரீசந்திரசேகரபாரதி ஸ்வாமிகள் நீண்ட நாட்களாக மௌனத்தில் இருந்து வந்தார். அப்பொழுது, அவருடைய பக்தர் ஒருவருக்கு, ஸ்வாமிகளின் தரிசனம் கிடைத்தது. நாம் இன்று மிகவும் பாக்கியம் செய்துள்ளோம். ஸ்வாமிகளின் தரிசனம் ஏகாந்தமாக நமக்கு இன்று கிடைத்துள்ளதே என்று மிகவும் சந்தோஷப்பட்டார். ஸ்வாமிகள் நம்மிடம் இரண்டு வார்த்தைகளாவது பேசவேண்டும் என்று மனதில் நினைத்தார்.

உடனே ஸ்வாமிகள், அவரைப் பார்த்து சிரித்துக்கொண்டே கூறலானார். "தாங்கள், நான் பேச வேண்டும் என்று ஆசைப்படுவதாக தெரிகின்றது. உலகத்திலோ பேசுவதற்கு இரண்டே இரண்டு விஷயங்கள்தான் உள்ளது. ஒன்று உலகம்,



Please Renew / Start your Subscription

மற்றொன்று பிரும்மம். உலகத்தைப் பற்றி எவ்வளவு பேசினாலும், அது ஒரு முடிவிற்கு வராது. பிரும்மமோ மனது, பேச்சு, அறிவு இவைகளுக்கு எட்டாதது. அதனால் அதைப்பற்றி எப்படிப் பேசுவது? அதனால்தான் நான் மௌனமாகவே இருந்து வருகின்றேன்" என்றார். அவரைப் போன்ற ஞானிகளால் அன்றி வேறு யாரால் அப்படிச் சொல்ல முடியும்.

நித்ரயா ஹ்ரியதே நக்தம் வ்யவாயேன ச வா வய:
திவா சார்தேஹயா ராஜன் குடும்பபரணேன வா 2:1:3

ஒருவன் தன் ஆயுளை எப்படியெல்லாம் செலவழிக்கின்றான் தெரியுமா? பொதுவாகவே எல்லோருக்கும் இரவில் தூக்கத்திலும், மைதுனத்திலும், பகலில் பொருளைத் தேடுவதிலும், குடும்ப நிர்வாகத்தைச் செய்வதிலுமே சரியாகிவிடுகின்றது. ஆனால் இப்படி மட்டுமா ஆயுளை வீணாக்குகின்றார்கள்? மது, சூதாட்டம், சினிமா, விளையாட்டு, எதற்கும் உபயோகமில்லாத பேச்சு, பொழுதுபோக்கு, கேளிக்கைகள், ஆட்டம், பாட்டம், கதை, சண்டை சச்சரவு, கோர்ட், கேஸ் இப்படியாக வேறு அருமையான ஆயுளை அழித்துக் கொள்கின்றார்கள் . சிலர் ஏதாவது வீணான பிரச்சனையில் சிக்கிக்கொண்டு விடுவார்கள். அதைப் பற்றிய கவலையிலும் அதிலிருந்து எப்படி வெளிவருவது என்பதே பலருடைய வாழ்க்கையாக அமைந்து விடுகின்றது. அவர்களால் வேறு எதைப் பற்றியும் சிந்திக்கக்கூட முடியாது. அய்யோ பாவம்!

ஒருக்காலும் நம் வாழ்க்கை அப்படி ஆகிவிடாமல் இறைவன் அருள வேண்டும். யுகம் யுகமாக நடந்து கொண்டிருக்கும் பிறப்பு, இறப்பு, வியாதி, துக்கம், விபத்து இவைகளைப் பார்த்துக்கொண்டே இருக்கும் மனிதன், அவைகள் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் ஒருநாள் நிகழும் என்பதை நினைப்பதே இல்லை. ஆகவே, இவைகளைப் பார்த்தும் அவன் பார்க்காதவனாகவே ஆகின்றான்.

தேஹாபத்ய கலத்ராதிஷ்வாத்மஸைன்யேஷ்வஸத்ஸ்வபி
தேஷாம் ப்ரமத்தோ நிதனம் பச்யந்நபி ந பச்யதி 2:1:4

உலகத்தில் எதைப் பற்றியும் சிந்திக்காமல், அந்த அந்த பொழுதை கழித்துக் கொண்டிருப்பவர்கள்தாம் அதிகம். உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு விஷயமும் பயத்தைத்



Please Renew / Start your Subscription

தரக்கூடியவைகள்தான். பஞ்சபூதங்களும் பயத்தைக் கொடுக்கக்கூடியது. பூமியில் எந்த நேரமும் நடுக்கம் ஏற்படலாம். நீரினால் சுனாமி, வெள்ளப் பெருக்கு அல்லது மழையின்மை ஏற் படலாம். தீயினால் விபத்துக்கள் ஏற்படலாம். சூறாவளி புயல் போன்ற காற்றுகள் யானையையே தூக்கிச் சென்றுவிட முடியும்! இந்த பூதங்களுக்கு ஆதாரமாகவே ஆகாசம் இருக்கின்றது.

வாழ்க்கையில் அநீதி, விபத்து, துஷ்டர்கள், நஷ்டம், பந்தப்பட்டவர்களின் மரணம், விஷம், ராஜ பயம், துக்கம், ஆபத்து போன்றவைகள் உண்டு. சரீரத்திற்கு வியாதி, மூப்பு, மரணம், போன்ற விபத்துக்கள் உண்டு. இவைகளைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தோமானால் இந்த வாழ்க்கை எல்லா இடத்திலும் எப்பொழுதும் பயம் உடையது.

இந்த பயத்திலிருந்து எப்படி விடுபடுவது? தானே பயப்படுபவன் பிறருக்கு எப்படி அபயம் கொடுக்க முடியும்? உண்மையில் ஒருவன் உலகம் பயங்கரமானது, இதிலிருந்து விலகி பயமற்ற தன்மையை விரும்புவானாகில், ஆத்மாவாகவும், கல்யாண குணங்கள் உடையவராகவும், எல்லோருடைய பாவத்தைப் போக்கக் கூடியவருமான ஸர்வேஸ்வரனுடைய கதைகளும், குணங்களும், லீலைகளும், நாமங்களுமே கேட்கத் தக்கதும், சொல்லத்தக்கதும் ஆகும்'' என்பது தான் தீர்மானம்

(கனியும்)

**நம் உடலில் எப்பொழுதும் இதயம் துடித்து கொண்டிருந்தாலும், அதை மருத்துவர் ஸ்டெதஸ்கோப் உதவியுடன் துல்லியமாக கண்டு அறிகின்றார்.**

**அதுபோல் நம் மனதில் எப்பொழுதும் "அஹம் அஹம்" என்கிற ஸ்புரணம் இருந்து கொண்டே இருக்கின்றது. இந்திரியங்களை அடக்கி, பிராணனை அடக்கி, பார்வையை உண்முகமாக ஆக்கி, ஆழ்ந்து கூர்ந்து அமைதியாக கவனித்தால் "அஹம்ஸ்புரணத்தை" கம்பீரமாக உணரலாம்.**

**- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**



Please Renew / Start your Subscription

# *மனதை எப்படி பொசுக்குவது!*

–ஸ்ரீபத்மபாதர்

என்னுடைய அலுவலக நண்பர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருந்தார். அவருக்கு புற்று நோய் அதுவும் **Advanced Condition**இல் இருந்தது. அவருக்கு உதவிக்கு யாரும் இல்லை என்பதால் நான் சில நாட்கள் அவருடன் மருத்துவமனையில் தங்கி இருந்தேன்.

மருத்துவர், இன்னும் இரண்டு நாட்கள்தான் அவர் உயிர் வாழ்வார் என்று கூறினார். அது அவருக்கும் தெரியும்.

உடலில் பல **tube**கள் பொருத்தப்பட்டு இருந்தது. அவர் கடைசி வரை ஞாபக சக்தியுடனும் **Conscious**ஆகவும் இருந்தார்.

அவர், மரணம் அடைவதற்கு ஒருநாள் முன்பாக எங்களுடன் வேலை பார்த்த ஒருவரை பற்றி, சற்று புகழ்ந்து பேசினேன். பிறருடைய புகழை, அந்த நிலையிலும் அவரால் சகிக்க முடியவில்லை.

**Tube**கள் பல சொருகியும் வேதனைப்படாத அவர் முகத்தில், பிறரின் புகழ்ச்சியை கேட்டு, வேதனை வந்தது. அதுபோல், அந்த நிலையிலும், அவரிடம் மற்றவரை பார்த்து, பொறாமை, கோபம் எல்லாம் முழு அளவில் இருக்கவே செய்தது.

எனக்கு முதலில் அது வியப்பாக இருந்தது. பிறகு அது பாடமாகவும் இருந்தது. இறந்த அவரது சரீரத்தை நெருப்பில் இட்டாகி விட்டது.

சரீரம் பொசுங்கி விட்டது. "நான்" "நான்" என்று எப்பொழுதும் இளமையுடனும், உற்சாகத்துடனும் துள்ளி கொண்டிருக்கும் மனதை எப்படி பொசுக்குவது!



Please Renew / Start your Subscription

# *சான்னித்யமும் நவக்ரஹமும்*

–குள்ள ஹரி

பக்தர் ஒருவருடன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஒரு கோவிலுக்கு சென்றிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், அந்த பக்தரிடம், "இந்த கோவிலில் பகவானின் சான்னித்யம் அதிகமாக உள்ளது" என்றார்கள். உடனே அந்த பக்தர், "பகவான்தான் எல்லா இடத்திலும், நீக்கமற நிறைந்தவர் ஆயிற்றே? அப்படி இருக்க, இந்த இடத்தில் சான்னித்யம் அதிகமாக இருக்கிறது, மற்றொரு இடத்தில் இல்லை என்று எப்படி கூற முடியும்" என்றார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அப்பொழுது ஒன்றும் பதில் பேசவில்லை. சிறிது நேரம் கழித்து, உடன் வந்த பக்தர் "காற்றே இல்லை. ஒரே புழுக்கமாக இருக்கின்றது" என்றார். உடனே ஸ்ரீஸ்வாமிஜி, "காற்று இல்லை என்றால் நீ எப்படி ஸ்வாசிக்கின்றாய்" என்றார். அதற்கு உடன் வந்த பக்தர், "காற்று இருக்கின்றது. காற்று இல்லாவிட்டால், நாம் இறந்து விடுவோம். நம்மை சுகப்படுத்த கூடிய அளவில் இல்லை" என்றார். உடனே ஸ்ரீஸ்வாமிஜி, "அதுபோல்தான் இறைவன் எல்லா இடத்திலும் இருக்கின்றார். நமக்கு சுகத்தை கொடுக்க கூடிய அளவில், அவன் அருள் ஒரு இடத்தில் அதிகமாக இருக்குமானால், சான்னித்யம் அதிகமாக இருக்கின்றது என்கின்றோம்" என்றார்.

இப்படியாக பேசிக்கொண்டே, கோவிலை வலம் வரும்பொழுது, நிறைய பக்தர்கள் நவக்ரஹங்களை போட்டி போட்டுக்கொண்டு, சுற்றிக்கொண்டு இருந்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி உடனே வந்த பக்தரிடம், "எல்லோரும் ஏன் இப்படி சுற்றி வருகின்றார்கள்" என்று கேட்டார்கள். அந்த பக்தர், "நவக்ரஹங்களை ப்ரீதி செய்வதற்காக" என்றார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் உடனே சிரித்துக்கொண்டே, "நவக்ரஹங்கள் எப்பொழுதும் சுற்றிக் கொண்டே இருக்கின்றது. தன் அருகில் வருபவர்களையும், அது தன்னை போலவே, சுற்ற வைத்து விடுகின்றது" என்றார். உடன் இருந்த அனைவரும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ஹாஸ்யத்தை கேட்டு சிரித்தனர்.



Please Renew / Start your Subscription

# என்ன பிறவி வரும்?

–குள்ள ஹரி



ஸ்ரீஞானானந்த மிஷன் சார்பில் தபோவனத்திலிருந்து "ஞான ஒளி" என்ற மாத புத்தகம் வெளிவருகின்றது. பிப்ரவரி இதழ் என் கைக்கு கிடைத்தது. அதில் படித்த ஒரு விஷயத்தை தங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். தபோவனத்தில் ஆரம்பத்தில் நாய் ஒன்று இருந்ததாம். அதற்கு பாண்டுரங்கன் என்று பெயராம். எப்பொழுதும் ஞானானந்த ஸ்வாமிகள் கொடுக்கும் பிரசாதத்திற்கு காத்து கொண்டிருக்குமாம்.

ஸ்வாமிகள் அதை பார்த்து இப்படி சொல்வாராம்.

"நாம் முன் ஜன்மத்திலே பசுக்கு கொடுத்த நைவேத்யத்தை பசு சாப்பிடும் முன் உண்டு விட்டோம். அதனாலே நாய் ஜன்மம் கிடைத்தது. என்ன பிறவியின் பயனை அடைவதற்கு வந்திருக்காயா? உடையை மாத்திண்டு போக வந்திருக்காயா? செய்த குற்றத்திற்கு மன்னிப்பு கேட்க வந்திருக்காயா?" என்று சொல்வாராம்.

இதை படித்தவுடன், எனக்கு தூக்கி வாரிப்போட்டது. பசுவின் நைவேத்யத்தை, பசு சாப்பிடும் முன் சாப்பிட்டதற்கே நாய் ஜன்மா என்றால், உலகில் நாம் வாழக்கூடிய இன்றைய நிலைக்கு, எந்த ஜன்மா கிடைக்குமோ, அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.



Please Renew / Start your Subscription

# அனுபவம் 6
# –பகவானின் தரிசனம்

–ஸ்ரீபத்மபாதர்

பல மஹான்களைப் பற்றியும், அவர்களது உபதேச முறைகள் பற்றியும் நாம் கேள்விப்படுகின்றோம். சாஸ்திரப்படி வாழ்வது, யோகம் பயில்வது, பக்தி செய்வது, வைராக்கியமுடன் வாழ்வது, ஜபம், கீர்த்தனம், தியானம், விசாரம் என சாதனைகள் பயில்வது என்று பலவற்றைப் பற்றி நாம் கேள்விப்படுகின்றோம். ஆனால் இவற்றை பயில்வதே ஆன்மீக அனுபவம் அல்ல.

கடலில் பலப்பல அலைகள் வந்துகொண்டே இருக்கும். அது போன்றுதான் நாம் கேள்விப்படும் ஆன்மீக விஷயங்கள். ஆனால், நடுக்கடலின் ஆழம் போன்றதுதான் உண்மையான ஆன்மீக அனுபவம்.

சிலர் ஜபம் செய்து, மந்திர சித்தி பெற்றிருப்பர். பிராணனை அடக்குவதால், சிலருக்கு சில சித்திகள் கூடியிருக்கும். இவர்கள் சொல்வது பலிக்கலாம். இவர்கள் பிறர் மனம் அறியலாம். இவர்களில் தியானம் நன்றாக பயின்றோருக்கு நடக்கப்போவது நன்றாகத் தெரிந்திருக்கலாம். பிராணனை அடக்குவதில் தேர்ச்சி பெற்றவர், கடல் நீரின்மேல் நடக்கக்கூடும். வானிலேயே பறக்கலாம். நெருப்பில் புகுந்து வரலாம். இன்னும் சிலர் சில பொருட்களை கையில் வரவழைக்கலாம். சிலரிடம் பிரார்த்தனை செய்தால், அவர்கள் அருளினால் துன்பம் விலகும். இவை அனைத்தும், அவரவர் தாங்கள் செய்த பயிற்சிகளின் மூலம் பெற்ற சித்திகள்தான். ஆனால், இவை ஆன்மீக அனுபவமாகாது.

இந்த சித்திகளும், பகவானின் அருளால்தான் கிடைக்கின்றது. இன்னும் சிலர், யாக யக்ஞங்கள் செய்து, தவம் பல செய்து. விரதங்கள் அனுஷ்டித்து, பகவானை திருப்தி செய்திருப்பர். இவர்களுக்கும் அநேக சித்திகள் கைகூடி இருக்கும். ஆனால், பகவானை தரிசிப்பது என்பதோ, ஆன்ம



Please Renew / Start your Subscription

சாக்ஷாத்காரம் பெறுவதோ என்பதுதான், உயர்ந்த ஆன்மீக அனுபவம் ஆகும். சித்திகளுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

புராணத்தைப் பார்த்தால், ஹிரண்யகசிபு பற்பல சித்திகள் பெற்றவன். தேவர்களுமே அவனை வணங்குகிறார்கள். ராவணனோ வேதம் பயின்றவன். யாகம் பல செய்தவன். கடும் தவம் செய்தவன். இவர்கள் ஆன்மானுபூதி பெற்றவர்கள் என்று யாரும் சொல்லவில்லை. சித்திகள் பெற்றவர்களுக்கு எல்லாம், பகவானை தரிசிக்க வேண்டும் என்ற ஆசை வராது. அந்த ஆர்வத்தைத் தருவது பகவானே. அதுவும் கோடியில் ஒருவருக்குத்தான் கிடைக்கும்.

அப்படி பகவானைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு, அது படிப்படியாக வளர வேண்டும். அப்படி வளர்ந்து, ஒருநாள், பகவான் வராவிடில் உயிர் தரிக்க முடியாது என்ற நிலை ஏற்பட வேண்டும். இதற்கு பகவத் விரஹம் என்று பெயர். பகவான் வராவிடில், உயிர் போய்விடும் என்ற நிலையில்தான் பகவான் தோன்றுகிறான்.

பகவத் தரிசனம் நூறுகோடி ஜனங்களில் ஒருவருக்கே கிடைக்கும். மீரா, நாமதேவர் போன்ற பெரிய மஹான்களுக்கே கூட வாழ்வில் சில முறைகள்தான், பகவானின் தரிசனம் கிடைத்து இருக்கின்றது. இந்த பகவத் தரிசனம் என்பது கடலின் மத்தியில் உள்ள ஆழம் போன்றது. இதுவும் ஆன்ம சாக்ஷாத்காரமும் ஒன்றுதான். நாம் கேள்விப்படும் ஆன்மீக சம்பந்தமான விஷயங்களோ, சித்திகளோ கடற்கரையில் ஒன்றன்பின் ஒன்றாக வரும் அலைகள் போன்றது.

---

முன் அட்டை – ஜூன் 27, மணிமங்கலம் அருகே மேட்டு கொளத்தூரில் ஸ்ரீஸ்வாமிஜி

பின் அட்டை – ஜூன் 13 புதிய விருதுநகர் நாமத்வாரில் ஸ்ரீப்ரேமிகவரதனுடன் ஸ்ரீஸ்வாமிஜி





Please Renew / Start your Subscription

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



Please Renew / Start your Subscription

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் - 6

சென்னை ராமகிருஷ்ணா மடம் - ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

---

ராமகிருஷ்ணரின் சீடர்களில் மூவர் முக்கியமானவர். ராக்கால் என்கிற பிரும்மானந்தர், ராமகிருஷ்ணர் போலவே அத்வைதானந்தத்தில் மூழ்கி இருந்தார். விவேகானந்தரோ, ராமகிருஷ்ணரின் உபதேசங்களை, உலகம் முழுவதற்கும் எடுத்து சொல்லி சேவை செய்தார். ராமகிருஷ்ணானந்தரோ, குருவையே தியானம் செய்து, உபாசித்து, ராமகிருஷ்ணர் போலவே மாறி விட்டார்.

குருவை உபாசிப்பது என்பதுதான் சர்வ சாஸ்திரங்களின் சாரம். வைணவ சம்பிரதாயத்தில் கூரத்தாழ்வார், வடுகநம்பிகளையும், சைவ சம்பிரதாயத்தில் திருநாவுக்கரசரிடம் பக்தி பூண்ட அப்பூதி அடிகளையும் உதாரணமாக சொல்வர். அப்படி, ரமண மஹரிஷிகளிடம் முருகனார் என்றொரு பக்தர் இருந்தார். அவர் ஆஸ்ரமத்திற்கு வெளியே, ஒரு குடிலில் வசித்து ஆத்ம விசாரம் பயின்று வந்தார். தினமும் பிக்ஷை எடுத்து, அதை ரமணாஸ்ரமம் அருகிலுள்ள தக்ஷிணாமூர்த்தி கோவிலில் வைத்துத்தான் உண்பார். ஒருமுறை ரமணாஸ்ரமத்தில் ரமணருக்கு அவியல் பரிமாறுகிறார்கள். அதை பார்த்தவுடன் ரமணர், "இது முருகனாருக்கு ரொம்ப பிடிக்கும். ஆனால் அவருக்கு யார் கொடுப்பார்கள்?" என்று சொன்னார். இதை பார்த்த ஒரு பக்தர், உடனே கொஞ்சம் அவியலை எடுத்துக் கொண்டு, முருகனார் வரும் தக்ஷிணாமூர்த்தி கோவிலுக்கு சென்றார். அவியலை முருகனாரிடம் கொடுத்து, விஷயத்தை சொன்னார். தன் குரு ரமணர் தன்னை ஸ்மரித்தார் என்றதை கேட்டவுடன், முருகனாரின் உடலில் மயிர்க்கூச்சல் ஏற்பட்டது. கண்கள் கசிந்தது. அந்த அவியலை தலையில் தூக்கி வைத்து கொண்டு நர்த்தனமே ஆடினார். அதற்கு பிரதக்ஷிணமும் நமஸ்காரமும் செய்தார். குருபக்தனுக்கு, குரு தன்னை



Please Renew / Start your Subscription

ஸ்மரித்தார் என்பதை காட்டிலும், பெரிதாக வேறு என்ன இருக்க முடியும்?

இது போலத்தான், குருபக்தர்களின் சரித்திரம் இருக்கும். மஹாராஷ்டிராவில் வாழ்ந்த ஏகநாதரின் சரித்திரம் அப்படிப்பட்டது. ஏகநாதர் தன் குரு ஜனார்த்தனரிடம், எதையும் கேட்காமல், 12வருடங்கள் சிரத்தையாக கைங்கரியம் செய்தார். தனக்கு இப்படி சிரத்தையாக கைங்கரியம் செய்யும், ஏகநாதருக்கு ஏதாவது அருள் செய்ய நினைத்தார், ஜனார்த்தன ஸ்வாமி. தனது தெய்வமான, தத்தாத்ரேயரின் சாக்ஷாத்காரத்தையே ஏகாநாதருக்கு பெற்றுக் கொடுத்தார்.

குரு, ஒரு சிஷ்யனுக்கு செய்யக்கூடிய பரம உபகாரம் என்னவென்றால், ஞானத்தையும், பகவத் சாக்ஷாத்காரத்தையும் தருவதுதான். மற்ற அனைத்தும் வீணே. உலகில் இருக்கும் கஷ்டங்களை குரு போக்குகிறார் என்பது சத்தியம் எனினும், உலகில் குருபக்தியோ, பகவத்பக்தியோ இல்லாமல் இருக்கும் பிற ஜனங்களுக்கு கஷ்ட நிவ்ருத்தியே ஏற்படாமலும் இல்லை. அவர்களுக்கும் வியாதி சொஸ்தமாகிறது; பணக்கஷ்டம் தீர்கிறது. குழந்தை பிறக்கிறது. வீடு கட்டுகிறான். பக்தி செய்யாதவனுக்கும் இவை கிடைத்து விடுகிறது.

ஆனால் ஸ்வயமாக முயற்சி செய்து, அடைய முடியாத ஒன்று இருக்கிறது. குரு ஒருவரால் மட்டும்தான், அதை தர முடியும். அதுதான் பகவத் தரிசனம். அதனால், குரு ஒருவரால் மட்டுமே தரக்கூடிய பக்தி, ஞான, வைராக்கியங்களை அவரிடம் பிரார்த்தனை மூலம் கேட்டு பெற வேண்டும். அதுதான் மிக முக்கியம். மற்றவற்றால் சாஸ்வதமான பலன் இல்லை. ஒருவன் இரவு வேளையில், ஒரு நகர பாதாள சாக்கடையில் விழுந்து விட்டான் என்று வைத்துக்கொள்வோம். ஒரே நாற்றம். ஆனால் நல்ல வேளையாக, அவன் மூழ்கவில்லை. கழுத்தளவு சாக்கடை. வெளியில், அவனால் வர முடியவில்லை. அவன் போட்ட சப்தமும் யாருக்கும் கேட்கவில்லை. இரவை அப்படியே கழித்தான். காலையில் அவன் இருந்த வழியாக சென்ற ஒருவரிடம், "என்னை கை தூக்கி விடுங்கள்" என்றுதானே அவன்



Please Renew / Start your Subscription

கேட்பான்? அப்படித்தானே கேட்கவேண்டும்? மாறாக அவன், "நான் இரவு விழுவதற்கு முன் சாப்பிட மறந்து விட்டேன். எனக்கு ஆஹாரம் வாங்கி கொடுங்கள்" என்று சொன்னால், அது எவ்வளவு மடத்தனம்? அதுபோல் உலக கஷ்டங்களுக்காக மட்டும், மஹான்களை ஒருவனை அணுகுவானா?

அதனால், மஹான்களிடமும் அவதாரபுருஷர்களிடமும் யாசித்து பெற வேண்டியது ஞான, பக்தி, வைராக்கியங்களே. மறுபடி இப்படி பாரத தேசத்தில் மனித பிறவியும், ஒரு மஹாத்மாவின் சங்கமும் கிடைக்குமென்று எப்படி சொல்ல முடியும்? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பர். நெல்லும் பதரும் சேர்ந்து காற்றில் பட்டால், கனமான நெல் கீழே விழுந்து விடும்; பதர் பிரிந்து பறந்து விடும். நெல்லை எடுத்து கொள்ளலாம். அதைத்தான் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதாக சொல்வர். உண்மையில் இதற்கு அர்த்தம் என்னவென்றால், உடம்பில் காற்று என்கிற பிராணன், உயிர் இருக்கையிலேயே, உண்மையான மஹான்களை தேடி சென்று சேவித்துக்கொள் என்பதுதான் அர்த்தம். உடம்பில் காற்று உள்ளபோதே மஹான்களை துதித்துக்கொள் என்பதுதான் அது.

அருகில் இருக்கும் கபாலீஸ்வரர் கோவிலுக்கு போனால், நந்தி இருக்கிறார். அருகில் நர்த்தன கணபதி; உள்ளே போனால் துர்க்கை, முருகன், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரும்மா, சண்டிகேஸ்வரர் என்ற பரிவாரங்களை பார்க்கலாம். இது ஒரு தத்துவம். மூலாதாரத்தில் இருக்கக்கூடிய சக்தி எப்பொழுதும் ஆடிக்கொண்டே இருப்பதால், அதுதான் நர்த்தன கணபதி. பிராணசக்தியினால் அதை மேலே ஆறுசக்கரங்களை பேதித்து கொண்டு செல்லுமாறு செய்தால், அதுவே ஆறுமுகரான சுப்ரமண்யன். விஷ்ணுமாயையான துர்க்கையை ஜெயித்தால், பரமாத்மாவின் தரிசனம் உள்ளே ஏற்படுகிறது.

இப்படி பரிவார தெய்வங்களையும், கோஷ்ட தெய்வங்களையும் வைத்துத்தான் பூஜை செய்ய வேண்டும் என்பது எப்படி விதியோ, அப்படி ஒரு மஹாபுருஷர் உலகில் இறங்கி வருகையில், அவருடன் அவரது பரிவாரங்களும் இறங்கி வரும் என்பதும் நியதி. (தொடரும்)



Please Renew / Start your Subscription

## மலேசிய, சிங்கப்பூர் சத்சங்க செய்திகள்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் பாக்யநாதன்ஜி, மே 22 முதல் ஜூன் 17 வரை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளில், சத்சங்கங்கள் நிகழ்த்த சென்றிருந்தார். மலேசியாவில் **Subang Jaya USJ21**இலும் மற்றும் சிங்கப்பூர் **Serangoon Road** இலும் உள்ள நாமத்வார்களில் ஸ்ரீப்ரேமிகவரதன் சான்னித்யத்துடன் விளங்குகிறான். அவனுக்கு மஹாமந்திரத்துடன் கூடிய நித்ய ஆராதனை, சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நாமத்வார்களுக்கு வந்து கீர்த்தனம் செய்யும் அன்பர்கள், ஆச்சரியமான நற்பலன்களை பெற்று வருகின்றார்கள்.

பாக்யாஜி கலந்து கொண்ட சத்சங்க நிகழ்ச்சிகளை மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாமத்வார் அன்பர்கள், மிக அழகாக ஏற்பாடு செய்திருந்தனர். அது அவர்கள் நாமப்பணிகளில் கொண்டிருந்த ஈடுபாட்டையும், குருநாதரின் மேல் வைத்திருந்த விசுவாசத்தையும் காட்டியது. பாக்யாஜி மலேசியா (மே24) மற்றும் சிங்கப்பூர் (ஜூன் 14) நாமத்வார்களில் சிறப்பு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தினார். இதில் திரளானோர் கலந்து கொண்டு, கீர்த்தனம் செய்து குருநாதரின் பிரசாதம் பெற்று சென்றனர்.

மலேசிய நாமத்வாரில் ஜூன்5-6 தேதிகளில், பாக்யாஜி மதுரஸ்மரணம் - **My Guru as I see Him** என்ற தலைப்பில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திவ்யசரித்திரத்தை மிக அழகாகவும், நெஞ்சில் பதியும்படியும் சொன்னார். வந்திருந்த அனைத்து அன்பர்களும் இதில் லயித்து விட்டனர். புதிதாய் வந்திருந்த பல அன்பர்கள், ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனம் பெறவும் விழைந்தனர். மே 25 அன்று, மலேசிய புசோங் பகுதியில், பாக்யாஜி அம்பரீஷ சரித்திரத்துடன் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடத்தினார். மே 28 - பண்டேர் புத்தேரி புசோங்கிலும், மே 26 - குரு மகிமை குறித்து சன்வே ஷீரடி சாயிபாபா கோவிலில் சத்சங்கமும்,



Please Renew / Start your Subscription

மே29இல் மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை **Castlefield School**லிலும், மே 30 - க்ளெங்க் மலேசியாவில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும், மே 31, ஜூன் 1 தேதிகளில் பேண்டிங் மாரியம்மன் கோவிலில், பக்த விஜய உபன்யாசமும், கூட்டு பிரார்த்தனையும் நிகழ்த்தினார் பாக்யாஜி.

பெனாங்க் மலேசியாவில் ஜூன் 2, 3 தேதிகளில், பல அன்பர்களின் இல்லங்களில் சத்சங்கங்கள் இடம் பெற்றது. பாக்யாஜி அஜாமிள சரித்திரம் சொல்ல, ஜூன் 4இல் ஏகாதசி மலேசிய நாமத்வாரில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஜூன்8-9 தேதிகளில், அழகு மிக்க இடமான **Broga, Semeyih, Malaysia**விலும், ஜூன் 15இல் **Batam Singapore**இலும் மதுர உத்ஸவ, பாகவத தர்ம **Retreat** கேம்ப் நடைபெற்றது. ப்ரேமிகவரதனுக்கு ப்ரபோதனம், பாகவத துதிகள், குருநாதரின் கலியையும் பலி கொள்ளும் கீர்த்தனை குறித்து பிரவசனம், அன்பர்களின் கேள்விகளுக்கு பதில்கள், குருநாதரின் மதுர கீதங்கள், புறப்பாடு, டோலோத்ஸவம் என உத்ஸவம் அழகாக நடைபெற்றது

சிங்கப்பூரில் ஜூன் 12 அன்று, கோபகுடீர குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் **Geylang** சிவன் கோவிலில் பாக்யாஜி முன்னிலையில் நடைபெற்றது. இதில் குழந்தைகளின் சபரி சரித்திர மற்றும் நாமமகிமை நாடகம் இருந்தது.

ஜூன் 13 மற்றும் 17 தேதிகளில் அதே சிவன் கோவிலில் **“The universality of the Divine name”** தலைப்பில் பாக்யாஜி பகவன்நாம கீர்த்தனத்தின் அவசியத்தையும், அது எப்படி எல்லோருக்கும் பொதுவானது என்பது குறித்தும் கலிசந்தரண உபநிடதத்தில் இருந்து, மேற்கோள் காட்டி உரையாற்றினார். மேலும் குருநாதர் சரித்திரம் மற்றும் பாகவதத்தில் இருந்தும் பல நிகழ்வுகளை மிக அழகாக எடுத்து உரைத்தார். வந்திருந்த அனைவரும் மன நிறைவுடன் குருவருள் பெற்று சென்றனர்.



Please Renew / Start your Subscription

## சனாதனப்புதிர் பகுதி 53 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. ஆதிசங்கரர் இயற்றிய நூல்கள் எத்தனை?
2. காஷ்மீரை ஆண்ட மன்னர்களில் ஒருவர் ஆதி சங்கரருக்கு கோவில் கட்டினார். அவர் அரசாண்ட காலம் எது?
3. ஆதி சங்கரர் நேபாளத்திற்கு சென்ற பொழுது அந்த ராஜ்யத்தை ஆண்ட அரசனின் பெயர் என்ன? எந்த ஆண்டில் சென்றார்?
4. ஜைன விஜயம் என்கிற நூல், குமரில பட்டர் மற்றும் ஆதிசங்கரர் காலத்தை குறிப்பிடுகிறது. காலங்கள் என்ன?
5. துவாரகா, ஜ்யோதிர், பூரி, சிருங்கேரி, காஞ்சி மடங்கள் ஆதிசங்கரரால் எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டன? அப்பொழுது ஆதிசங்கரின் வயது என்ன?
6. ஆதிசங்கரரின் குருவின் பெயர் என்ன? அவரது இயற்பெயர் என்ன?
7. துவாரகா மடத்தின் அதிபதியாக ஆதிசங்கரரால் நியமிக்கப்பட்டவர் யார்?
8. ஆதி சங்கரர் தனது சிஷ்யனின் நூலுக்கு உரை இயற்றினார். நூலின் பெயர் என்ன?
9. உதாங்கன் எங்கே ஆதிசங்கரரை எங்கே சந்தித்தான்? அவரது இயற்பெயர் என்ன? ஆதிசங்கரரால் சூட்டப்பட்ட பெயர் என்ன? எந்த மடத்திற்கு பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார்?
10. ஆதிசங்கர பகவத்பாதரின் உபதேசங்களின் சாராம்ஸம் என்ன?

## <u>சனாதனப்புதிர் பகுதி 53 - விடைகள் - ஆத்ரேயன்</u>

1. கணக்கில் அடங்காது. இப்பொழுது கிடைப்பது 155. வேதாந்த கிரந்தங்கள் 52. பக்தி நூல்கள் 80. பாஷ்யம் என்ற விளக்க உரை 23.
2. 70வது அரசர். 417 BC முதல் 357 BC வரை.
3. சூர்ய வம்சத்து அரசனான விருஷதேவ வர்மன். 487 BC. தனது பிள்ளைக்கு அரசர் சங்கர தேவா என்ற பெயர் சூட்டினார்.
4. குமரில பட்டர் பிறப்பு 557 BC; குமரில பட்டர் மறைவு 477 BC;



Please Renew / Start your Subscription

குமரில பட்டரை சந்தித்தது 494 BC; சங்கரர் பிறப்பு 509 BC.

5. துவாரகா 490 BC(19). ஜ்யோதிர் 485 BC(24). பூரி 484 BC (25). சிருங்கேரி 483 BC (26). காஞ்சி 477 BC (32).

6. கோவிந்த பாதர்; சந்திர சர்மா

7. ஹஸ்தாமலகர்

8. ஹஸ்தாமலகர்; ஹஸ்தாமலகீயம்

9. சிருங்கேரியில்; ஆனந்த கிரி. தோடகாச்சாரியார். ஜ்யோதிர் மடம்.

10. "ஸ்லோக அர்தேன ப்ரவஸஷ்யாமி யதுக்தம் சாஸ்த்ர கோடிபி: ப்ரஹ்மம் சத்யம் ஜகன் மித்யா ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:"

ப்ரஹ்மம் உண்மை - பிரபஞ்சம் மாயை; ஜீவன் ப்ரஹ்மமே தவிர வேறில்லை.

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

ADVT

Our products

Globe Tipper | Unit Converter | Smart Alarm Pro | DRACO, The Dragon

Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

For any Business Related Enquiry email us at contact@vapssky.com



Please Renew / Start your Subscription

# பாலகர்களுக்கு ஒரு கதை



## விவசாயி!

மங்களபுரி எனும் கிராமத்தில், ஒரு விவசாயி வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு நல்ல குரு இருந்தார். குருவின் உபதேசங்களை கேட்டு, அந்த விவசாயியின் மனம் பண்பட்டு இருந்தது. எதற்கும் கவலைப்படாதவராகவும் இன்முகத்தவராகவும் அவர் இருந்தார். என்ன செயல் செய்தாலும், "இது என் குருவின் இஷ்டப்படி நடந்தது" என்பார். என்ன சொல் சொன்னாலும், "என் குருவின் இச்சையினால்தான் இது என் நாவில் வந்தது" என்பார்.

இப்படி சொல்லியும் செய்தும் வந்த அவர், சோம்பேறியாய் இல்லாமல், உழைத்தும் வந்தார். பிறரை மதிப்பவராகவும், அன்பு மிகுந்தவராகவும் காணப்பட்டார். அவர் சொல்லும் செயலும் வெறும் பேச்சாக இல்லாமல், முற்றிலும் தன் மனதை பூரணமாய் குருவிடம் ஒப்புவித்தவராய் காணப்பட்டார். சுருங்க சொன்னால், தனது ஒப்புவித்த மனதின் காரணமாய், மனதில் ஒரு அலாதி சுதந்திரம் நிலவுவதை அவர் அனுபவித்து வந்தார். அவருக்கு ஒரு மனைவியும் அன்பு மகனும் இருந்தனர்.

ஒருமுறை அந்த விவசாயி உழுவதற்காக வைத்திருந்த குதிரையானது மலை பிரதேசத்திற்கு ஓடி போய் விட்டது. அண்டை நிலத்தவர்கள் எல்லோரும் அவரிடம் வந்தது "என்ன செய்ய போகிறாய்? உனது குதிரை ஓடி போய் விட்டது?" என்றனர். அப்பொழுது அந்த விவசாயி "அது சரி! குதிரை ஓடி போனது என் குருவின் இஷ்டம். எது நடந்தாலும் அது நன்மைக்கே" என்றார். வந்தவர்கள் எல்லோரும் முணுமுணுத்து கொண்டே போனார்கள்.

ஆனால் ஒரு வாரம் கழித்து அதே குதிரை மேலும் பல குதிரைகளை தானகவே கூட்டி கொண்டு, அந்த விவசாயியின் கொட்டிலுக்கு வந்து விட்டது.



Please Renew / Start your Subscription

அதை பார்த்து முன்னர் கேலி செய்தவர்கள் "அடேயப்பா! உனக்கு அதிர்ஷ்டம். நீ கொடுத்து வைத்தவன்" என்றனர். விவசாயி அதை பார்த்து, கொஞ்சமும் பெருமிதமோ, அதிக மகிழ்ச்சியோ உறாமல், "இதுவும் என் குருவின் இஷ்டப்படி நடக்கிறது. இதுவும் நன்மைக்கே" என்றார். வந்தவர்கள் வாயடைத்து பேசாமல் போயினர். இருந்தாலும், அவர்கள் மனதில் "இந்த விவசாயி ஆனாலும் பிதற்றுகிறான். அதிர்ஷ்டம் வந்து அதை காட்டி கொள்ள மறுக்கிறான்" என்று சொல்லி கொண்டே போனார்கள்.

விவசாயி எப்பொழுதும் போல், திருப்தியுடன் வேலை செய்து வரலானார். அந்த விவசாயியின் மகன், அந்த குதிரைகளை எல்லாம் பராமரித்து வந்தான். அவற்றின் மேல் பயணித்து பொழுதையும் போக்குபவனாய் இருந்தான் அவன். ஒருநாள், அந்த காட்டு குதிரைகளுள் ஒன்றின் மேல் அவன் பயணிக்கையில், அது அவனை கீழே தள்ளி விட்டது. அந்த விவசாயியின் மகன் கால் உடைந்து விட்டது.

அக்கம் பக்கத்தவர்கள் எல்லாம் மறுபடி வந்து "த்சோ! துரதிர்ஷ்டம் போ! போயும் போயும் உன் மகனுக்கா, இப்படி நேர வேண்டும். உனக்கு அடிபட்டு இருந்தாலும் பரவாயில்லை. நீ வயதானவன். ஆனால் பார்! உன் மகனுக்கு அடிபட்டு விட்டது. இனி இரு மாதங்களுக்கு அவனால் எதுவும் செய்ய முடியாது" என்றனர். மறுபடி அந்த விவசாயி கொஞ்சமும் கலங்காதவராய், "எனக்கு புரியாவிடினும், இதுவும் குருவின் இஷ்டப்படியும் அவரது கருணையினாலும் நடந்த நிகழ்வாகவே கருதுகிறேன்" என்றார்.

அனைவரும், அதை அப்படியே அந்த குருவிடம் போய் சொன்னார்கள். அவரோ ஒன்றும் பதில் பேசாதவராய் புன்முறுவல் பூத்து நின்றார். அந்த ஊரை ஒரு சிற்றரசர் ஆண்டு வந்தார். அவரை ஒருவன், அநியாயமாய் வெல்வதற்கு திட்டம் போட்டான். அவன் மிக்க முரடனாக இருந்தான். அந்த குட்டி ராஜ்ஜியத்தை வெல்ல படை திரட்டி வந்தான். அவன் தன்



Please Renew / Start your Subscription

ஆட்களை அனுப்பி, இந்த விவசாயி வாழ்ந்த ஊரில் இருந்த இளைஞர்களை எல்லாம் பிடித்து கொண்டு வர சொன்னான். அவனது படை வீரர்களெல்லாம் வந்து, எல்லோரையும் வலுக்கட்டாயமாய் சண்டைக்கு இழுத்துக்கொண்டு போனார்கள். எல்லோரும் வருத்தமானார்கள்.

ஆனால், விவசாயியின் மகனுக்கு கால் உடைந்து இருந்ததால், அவனை விட்டு விட்டார்கள். அப்பொழுதும் விவசாயி ஒன்றும் பெரிதாக பேசவில்லை. "இதுவும் குருவின் விருப்பம்தான். எல்லாம் ஏதோ நன்மைக்காக நடக்கிறது" என்றார்.

ஆனால், அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களெல்லாம் இப்பொழுது விவசாயியை பார்க்க வரவே இல்லை!



75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com
www.buddiesinfotech.com



Please Renew / Start your Subscription

## சத்சங்க செய்திகள்

**மே 28 –** நங்கநல்லூரில் நடைபெற்ற கோபகுடீர ஆண்டு விழாவின் பூர்த்தியில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளுரையும், குழந்தைகளுக்கு ஆசீர்வாதங்களையும் வழங்கினார்கள்.

**ஜூன் 9 –** சென்னை பாரதிதாசன் காலனி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவில் கும்பாபிஷேக வார்ஷிக உத்ஸவத்தை ஒட்டி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கோவில் வளாகத்தில், அருளுரை வழங்கினார்கள். திரளான அன்பர்கள் வந்து, சிரவணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**ஜூன் 12 –** உளுந்தூர்பேட்டை அருகே சிறுப்பாக்கம் கிராம பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக வைபவத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார்கள். சுமார் 1500 கிராம மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

**ஜூன் 13–14** – தேதிகளில் ஸ்ரீஸ்வாமிஜி விருதுநகர், சிவகாசி மற்றும் தூத்துக்குடி நாமத்வார்களுக்கு விஜயம் செய்தார்கள். புதிதாக அமைந்துள்ள விருதுநகர் நாமத்வாரில், நாமகீர்த்தன மஹிமை குறித்து சத்சங்கம் நிகழ்த்தினார்கள்.

**ஜூன் 17 –** உடுமலைப்பேட்டை அருகே கொங்கல்நகரம் ஸ்ரீகரிவரதராஜ பெருமாள் கோவில் கும்பாபிஷேகத்தில், கலந்து கொண்டு நாமகீர்த்தனத்தின் மேன்மையை குறித்து பிரவசனம் செய்தருளினார்கள்.

**ஜூன் 24 –** ஆம்பூர் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில், திரளான அன்பர்கள் முன்பாக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் நாமகீர்த்தனத்தின் அவசியத்தை குறித்து பிரவசனம் செய்தருளினார்கள்.

**ஜூன் 27 –** மணிமங்கலம் அருகே மேட்டுக்கொளத்தூர் கிராமத்தில் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பிள்ளையாரின் மஹிமை குறித்து பிரவசனம் செய்தருளினார்கள்.

**ஆஸ்திரேலிய சத்சங்கங்கள்** – ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பூரண அருளாசிகளுடன், ஆஸ்திரேலிய சத்சங்கங்களில் பங்கு கொண்ட பூர்ணிமாஜி மே 19 முதல் 25 வரை, மெல்போர்னில் நடைபெற்ற பாகவத சப்தாஹத்தில் கலந்து கொண்டார். தினமும் காலையில்



Please Renew / Start your Subscription

பாகவத பாராயணமும் மாலையில் **Waverley Meadows Primary School**இல் பூர்ணிமாஜியின் உபன்யாசமும், இடம்பெற்று இருந்தது. குளிரையும் பொருட்படுத்தாமல், ஏராளமான அன்பர்கள் வந்து, பாகவத சிரவணமும் குருநாதரின் கீர்த்தனங்களையும், கோபகுடீர குழந்தைகளின் கலை நிகழ்ச் சிகளையும், கேட்டும் கண்டும் ரசித்து அனுபவித்தனர். பக்தி பாவங்கள், பகவானின் மேல் வரும் அன்பு, அவன் மேல் வரும் விசுவாசம், பகவானின் லீலைகள், பக்த சரித்திரங்கள் ஆகியன குறித்து பூர்ணிமாஜி அழகாக பேசினார். பூர்த்தியன்று கிருஷ்ண ஜனனமும் ருக்மிணி கல்யாணமும் கோலாஹலமாக இடம்பெற் றது. தினமும் சுவையான பிரசாதமும், அதிலும் குறிப்பாக பூர்த்தி அன்று விசேஷ கல்யாண பிரசாதம் மிக நேர்த்தியாக அலங்காரத்தில் ஜொலித்த பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டது. ஆஸ்திரேலிய அன்பர்கள் இதில் போட்டி போட்டு கொண்டு பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீசிதம்பரம்



ஸ்ரீனிவாசன் **Chairman of Victoria Multicultural Commission** மற்றும் ஸ்ரீமதி காயத்ரி ரமேஷ் **Datta Guru Natyalaya Malaysia** சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். ஜூன் 1முதல் 6வரை சிட்னியில் நடைபெற்ற பல சத்சங்கங்களில் பூர்ணிமாஜி கலந்து கொண்டார். ஜூன் 2 அன்று, ஹார்ன்ஸ்பை கம்யூனிட்டி ஹாலில் பேசிய அவர் ஸ்ரீமத்பாகவத உபன்யாசம் செய்தார். இதில் "முதலில் ஒருவர் மனிதாபிமானமிக்க மனிதராக மாற


**YOUTH LEADERSHIP WORKSHOP**

Effective Communication, Positive approach and Values from our heritage

**4th August 2013, 14- 18 Years Age Group**

**By GOD India Speakers**




**Venue: Panigraha , West Mambalam**
**Course Timings: 9 to 12Am**
**Lunch & Snacks will be provided**

GOD
Global Organisation for Divinity

**Contact : 9500910199**
**Workshop Fee Rs1000**




Please Renew / Start your Subscription

வேண்டும். அதன் பின்னரே தெய்வீகத்தன்மையை பெற முடியும்" என்று சொல்வது, நற்குணங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதை காட்டுகிறது. இந்த நற்குணங்களை பிரார்த்தனை மூலமாகவும், பாகவத கதைகளை தொடர்ந்து கேட்பதன் மூலமாகவும் ஒருவர் மிக எளிதில் பெற முடியும்" என்பதை தெளிவாக சொன்னார். ஜூன்4 அன்று ஒரு அன்பர் இல்லத்தில் நடைபெற்ற சத்சங்கத்தில், இருபது புது அன்பர்கள் தங்களது குடும்பங்களுடன் வந்து மஹாமந்திர கீர்த்தனம் செய்தனர். அனைவரும் குருநாதரை இந்தியா வந்து தரிசிக்க விரும்பினர். ஜூன் 7 முதல் 9 வரை, பிரிஸ்பேனில் பூர்ணிமாஜி பல அன்பர்களின் இல்லங்களில் ராமாயணம், சத்சங்கத்தின் பெருமை, அதன் அவசியம், நாமகீர்த்தனத்தின் இன்றியமையாமை, சாதனை செய்கையில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடு, குரு பக்தி, பகவானிடம் சரணடைவது, குரு சேவை, அம்பரீஷ, விபீஷண, சபரி மற்றும் சூர்தாஸ், துளசிதாஸ் சரித்திரங்கள் குறித்து மிக ஆழமாக பேசினார். இந்த சத்சங்கங்களில் குருநாதரின் கீர்த்தனங்கள் அன்பர்களால் அழகாக பாடப்பட்டன. அன்பர்கள் தங்களுக்கு ஏற்பட்ட நாமானுபவங்களையும், சுவைபட பகிர்ந்து கொண்டனர்.








Please Renew / Start your Subscription

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



*- ஜனனி*

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -7

ஸ்ரீராதையின் அருளினால், பாபா ஹம்ஸதாஸ்ஜிக்கு பாகவதம் கண்டஸ்தமாகி இருந்தது. வ்யாகரண சாஸ்திரமும் பயின்ற அவர், கதை கேட்க வரும் சாதுக்களுக்கு சேவை, வயிறார உணவு தர வேண்டும் என்ற நிபந்தனையுடன், பாகவத பக்தமால் உபந்யாஸம் ரஸமயமாக செய்து வந்தார். பணத்தை கைகளில் தொடாமல் பரமஹம்ஸ வ்ருத்தியிலேயே இருந்தார். அவர் மிருகங்களிடமும், பக்ஷிகளிடமும் அன்பு செலுத்துவார். ஒரு பாம்பு கூட தினம் அவர் தரிசனத்திற்கு வரும். அதன் புற்றில், பயந்து போய் கல்லை வைத்து அடைத்த பொழுது, பாபா கடிந்து கொண்டார்.

பாபா தன் குகையில் த்யானத்திலிருக்கும் பொழுது, ராதையின் கோயிலில் அளிக்கப்படும் நைவேத்தியத்தை அறிந்துவிடுவார். ஒரு முறை அவர் ஸ்ரீராதைக்காக உடை ஒன்று தயார் செய்து எடுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றார். வழியில் ஒரு சிறு பெண் அவரை நோக்கி வந்து அந்த உடைகளை ஆசையுடன் பார்த்தவாறே, "பாபா, இந்த உடையை எனக்குக் கொடுங்களேன்" என்றபடியே, உடையை அவர் கையிலிருந்து எடுத்துக்கொண்டு போயே விட்டாள் அச்சிறுமி. பாபாவும் பார்த்துக் கொண்டே இருந்துவிட்டார். ஆனால், அந்த பெண்ணின் ஸ்பர்ஸ மாத்திரத்தில், அவரது ஒவ்வொரு அங்கத்திலும் ஆனந்தத்தின் அலைகள் தாக்கின. பாவாவேசத்தில் தள்ளாடியபடியே, அவர் ஸ்ரீஜீயின் கோயிலைச் சென்றடைந்தார். அந்த உடையையே ராதை தரித்திருப்பதைக் கண்டு விக்கித்து நின்றார் !

பாபா அப்பொழுது மனதிற்குள் நினைக்கலானார் , "தன்யனானேன் அம்மா! உனக்கு இவ்வளவு கூட பொறுமையில்லையா? பாதி வழியிலேயே உடையை



Please Renew / Start your Subscription

எடுத்துக்கொண்டு அதை அணிந்து கொண்டுள்ளாயே? ஆனால் பொறுமை ஏது உனக்கு. ப்ரேமிக பக்தர்களின் மனதில் உனக்கு அன்பளிப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதுமே அதை பெற்று விட நீ குதூகலமாகி விடுகிறாய்! இதுதான் ப்ரேமைமயமான உன்னுடைய பக்தவாத்ஸயத்தின் பெருமை. உனக்கே அதன் மேல் எந்த கட்டுப்பாடுமில்லை. உன்னையும் மீறியன்றோ அது பொங்குகிறது?

ஹம்ஸதாஸ்ஜீ ஸுக ஸம்ப்ரதாயத்தின் ரஸிக ஸந்த், ஸ்ரீஸரஸமாதுரிசரண்ஜீயிடம் மிகவும் அன்புடன் இருப்பார். அவரது அன்பு கட்டளைக்கு இணங்கி பலமுறை பாபா ஜெய்பூர் மற்றும் அல்வார் அருகில் ஸுகஸம்ப்ரதாய ஆச்சார்யர் ஸ்ரீஷ்யாம்சரண்தாஸ்ஜீ அவர்களின் ஜன்ம ஸ்தானமான டஹராவில், ஸ்ரீமத்பாகவத கதை கூறுவார்.

ஸரஸமாதுரீஜீ ஸித்தியடைந்த பின், பாபாவின் 78வது வயதில் ஸரஸமாதுரீஜீயின் பிள்ளையின் ஸ்ரீராதேஷ்யாமசரண்ஜீ, பாபாவை ஸ்ரீஸுகரின் ஜன்மோத்ஸவத்தை ஒட்டி ஏற்பாடு ஆகியிருந்த பாகவத கதைக்காக ஜெய்பூர் அழைத்துச் சென்று கொண்டிருந்தார். போகும் வழியில் பாபாவிற்கு ஜுரம் வந்துவிட்டது. அதனால் அவர் மயக்கம் அடையும் அளவிற்கு அது மிகவும் அதிகமாகியது. ஸ்ரீரஸிகமாதுரீஜீ கவலைப்பட்டார் ஆஹா! வ்ரஜத்தின் வெளியில் இவர் உடம்பைவிட்டு உயிர் பிரிந்தால் என்னவாகும்? மயக்க நிலையிலிருந்த பாபா திடீரென்று, "ராதே! பாபா உடம்பைவிட்டுவிட்டால், நான் யாருக்கு எந்த முகத்தை காண்பிப்பேன் என்று நீ கவலைப்படுகிறாய். கவலைப்படாதே! நான் சாகமாட்டேன்! ஸுகதேவருக்கு கதை சொல்லிவிட்டே திரும்புவேன்" என்றார்.

அது அப்படியே நடந்தது. ஜெய்பூரில் இன்று வரை மக்கள் நினைவு கூறுமளவிற்கு பாபா, அற்புதமாகவும் பாவபூர்ணமாகவும் கதை சொன்னார். அங்கிருந்து நல்ல உடல் நிலையிலேயே திரும்பினார். சில தினங்களுக்கு பின் 1937ஆம் ஆண்டு, அவர் ப்ருந்தாவனத்தில் பூத உடலை நீத்து, நித்ய நிகுஞ்ஜத்திற்குச் சென்றார்.

(தொடரும்)



Please Renew / Start your Subscription

# *மாலே மணிவண்ணா - 119*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

இதுகாறும் கூறியவற்றால், திருமால் வழிபாடு கண்ணன் (மாயோன்) பலதேவன் என்று இரண்டு வகையாக வழிபடப்பெற்றது. ஆனாலும் தோற்றத்தில் இருவர் ஆயினும், சொல்லும் பொருளும் போல இருவரும் ஒருவரே என்று பரிபாடல் காட்டுகிறது. மாயோனையும், அவன் முன்னோனாகிய பலராமனையும் தாங்கி நிற்கின்ற, நீண்ட நிலைமையினை உடைய புகழான் உயர்ந்த இருங்குன்றம் சிறந்தது.

'கடலும் கானலும்' போல கண்ணன்-பலராமனைக் குறிப்பிடுவது தோற்றத்தால் நீலநிறமும், வெள்ளை மணல் கடல்கரையும் கொண்டு ஆகும்,

*"மாயவனும் தம்முனும் போல மறி கடலும்*
*கானலும் சேர்வெண்மணலும் காணாயோ "*

என்னும் "திணைமாலை நூற்றைம்பது" (58) கொண்டு அறியலாம். நிறம் மாறியிருந்தாலும், அவர்கள் தொழில் காத்தலாகிய ஒன்றே என்று நினைவூட்டினார். மணம் வீசுகின்ற பூங்கொத்துக்களை அணிந்த, அழகிய துழாய் மாலையை உடைய எம்பெருமான் வெளிப்பட்டுக் கொடுத்தால் அல்லாமல் பெருமை மிக்க துறக்கத்தை சென்றடைதல் என்பது அவ்வளவு எளிதானதல்ல என்று அடுத்தபடி கூறுகிறார்.

*குலவரை சிலவினும் சிறந்தது,*
*கல்லறை கடலும் கானலும் போலவும்*
*புல்லிய சொல்லும் பொருளும் போலவும்*
*எல்லாம் வேறு வேறு உருவின் ஒரு தொழில் இருவர்த்*
*தாங்கும் நீள்நிலை ஓங்கிருங் குன்றம்*
*நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை*
*ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"*



Please Renew / Start your Subscription

பரிபாடல் கூறும் நாறிணர்த் துழாய் என்பது மிக்க பொருட்சிறப்புடையது.

பதிற்றுப்பத்துள் நான்காம்பத்தின் முதற்பாடல் பெயர். "கமழ்குரல் துழாஅய்" என்பதாகும். அதன் பழைய உரை, "கமழ்குரல் துழாஅய்" என்றது நாறுகின்ற பூங்கொத்துக்களை உடைய என்றவாறு. நாறாத பூ உடையதனை மிக நாறுவதொன்று போல, பூ என்ற சாதி ஒருமை பற்றி சொன்ன சொற் சிறப்பால் இப்பாடல் "கமழ் குரல் துழாய்" என்று பெயராயிற்று.



இயல்பாக பூங்கொத்து மணம் வீசும். ஆனால் துளசியின் பூங்கொத்து மணம் வீசாது. அப்படி இருக்கும்போது துளசியை நாறினார்த்துழாய் என்று கூறியது வியப்பாகலாம். பொதுவாக எல்லாப்பூக்களும் மணம் வீசாது ஆயினும், துளசி இலை விடும்போதே மணம் விட தொடங்குகின்றது. அதனால், பூங்கொத்து தோன்றும் மணம் வீசும் தழைகளை தோற்றி விடுதலால், அந்த இலை மணம் பூவிலும் தோன்றுவது போல் ஆகிறது.

இனி மற்ற ஆழ்வார்களுக்கும், ஆண்டாளுக்கும் வேறுபாடு சொல்லும்போது இலைவிடும்போதே மணக்கும் துளசி போலே, அவதரித்த உடனேயே, எம்பெருமான் மேல் அளவிறந்த காதல் மணம் கொண்டவள் ஆண்டாள் என்பர் வியாக்கியானகாரர் என்பதும் ஈண்டு கருத தக்கது.

இவற்றை எல்லாம் மனத்திற்கொண்டு, எம்பெருமானை "நாறிணர்த் துழாயோன்" என்று பரிபாடல் சுட்டி காட்டியது. பெருமானை விட அவன் அணிந்துள்ள துளசியே துறக்கம் நல்கும் சிறப்பினை உடையது என்பதனை நினைவூட்டுதல் அறிக. (தொடரும்)



Please Renew / Start your Subscription

# அப்பாலுக்கு அப்பால்



## பசவரை தீர்க்க முயற்சி!

உள்ளே வந்த அல்லமபிரபு, அனுபவ மண்டபத்தையும், ஏராளமான பக்தர்களையும் அன்னதானத்தையும் பார்த்து, "இங்கிருந்து செல்ல எனக்கு மனமே வராது" என்று சொல்லி கொண்டே இருந்தார். அல்லமர் முன்னிலையில் ஒவ்வொரு சரணரும் தனது வாழ்க்கையை பற்றி சொல்லி கொண்டு இருந்தனர். அப்பொழுது ஒருவர் வரிசையில் எழுந்தார்.

"நான் காஷ்மீர தேசத்து மஹாதேவ மன்னனின் மெய்க்காவலர்களில் ஒருவனாக இருந்தேன். என் மன்னர் மிகுந்த சிவபக்தர். அங்கு வந்த பல பக்தர்கள் பசவரை புகழ்ந்தது அவருக்கு ஏனோ பிடிக்கவில்லை. என்னை ஒருநாள் தனிமையில் அழைத்து "சிக்கைய்யா! ஒரு உதவி செய்! நேரே கிளம்பி கர்நாடகம் செல். எப்படியாவது சமயம் பார்த்து பசவரை தீர்த்து கட்டி விடு" என்று சொல்லி அனுப்பினார்.

கேட்டுக்கொண்டிருந்த சரணர் கூட்டம் ஸ்தம்பித்தது. பசவரும் அல்லமரும் கவனித்து கொண்டிருந்தனர். சிக்கைய்யா தொடர்ந்தார். "இங்கு பசவருக்கு கிடைத்த மரியாதையையும் அவர் பின் மக்கள் சென்றதையும், பார்த்து என்னால் கொஞ்சமும் அவரை நெருங்க முடியும் என்று தோன்றவில்லை. அவரை நெருங்க, பக்தனாய் வேஷம் போடுவது ஒன்றுதான் வழி என்று தெரிந்து கொண்டு, அப்படியே பலவிதமாய் வேஷம் போட்டேன். நானோ இயற்கையில் ஒரு போர்வீரன். கடினமான மனது கொண்டவன். ஆனாலும் என்னால், பசவரை ஓரிரு முறை தூரத்தில் பார்க்கையில், அவர் மேல் துவேஷத்தை வளர்த்து கொள்ள முடியவில்லை. இது என் முதல் தோல்வி"

"கழுத்தில் ருத்ராட்சம் வாங்கி போட்டுக் கொண்டேன். காவி உடைக்கும், நெற்றியில் விபூதிக்கும் பஞ்சமில்லாமல் இருந்தேன். எல்லோரும் வேலை செய்ததால், நானும் ஏதோ காய்கறி வியாபாரி போல் நடித்தேன். ஒரு காம்பு ஒடித்த



Please Renew / Start your Subscription

கத்தரிக்காயையே சிவலிங்கமாய் கழுத்தில் அணிந்து வந்தேன்".

"ஒருநாள் இடுப்பில் கத்தியை சொருகி கொண்டு தைரியமாய் இந்த அனுபவ மண்டபத்திற்கு வந்தேன். அதே சமயம் பார்த்து பசவரும் வந்தார். நான் படபடப்புடன் இருந்தேன். பசவர் புதிய சரணர்களை பார்த்தால் விழுந்தே வணங்குவார் என்று எனக்கு தெரியாது. அன்று அப்படித்தான் செய்தார். என்னை கட்டித் தழுவி கொண்டார். அவர் முகத்தை நான் பார்க்கவே இல்லை. அவர் மேலும் என்னை பார்த்து "அடியாரே தங்கள் கழுத்தில் உள்ள லிங்கத்தை எடுத்து பூஜை செய்யவும்" என்றார். என் கைகள் நடுங்க ஆரம்பித்தது. வியர்க்கலுற்றேன். பசவரோ "அன்பரே! பதட்டம் வேண்டாம். நிதானமாக செய்யுங்கள். தங்கள் பூஜை முடிந்த பின்தான் நான் என் அரண்மனை உத்யோகத்தை பார்க்க செல்வேன்" என்றார்.

"மாட்டி கொண்டால், தலை சீவ வந்த என் தலை போய் விடும். ஆனாலும் நான் போர் வீரன். மரணத்தை பற்றி அஞ்சாதவன். அதனால் தைரியத்தை வரவழைத்து கொண்டு கழுத்திலிருந்த கத்தரிக்காயை பக்தியுடன் எடுப்பது போல் நடித்தேன். அப்பொழுது ஒரு அதிசயம் நடந்தது. அதை என்னவென்று சொல்வேன்? அங்கே ஒரு நிஜ லிங்கம் இருந்தது. பசவர் ஒன்றுமே நிகழாதது போல் பயபக்தியுடன் அதை வாங்கி கண்களில் ஒற்றி கொண்டார். ஒரு பிரகாசம் என் நெஞ்சில் நுழைந்தது. என் மனதில் மறைந்திருந்த குரூர புத்தி சொல்லிக்கொள்ளாமல் ஓடி போனது. நான் அழுதேன். எதற்கு அழுதேன் என்று தெரியவில்லை. எல்லோரும் நான் பக்தியில் அழுகிறேன் என்று நினைத்தார்கள். ஆனால் நானோ என் மன மாற்றத்தினால் மனம் லேசானதால் அழுதேன். பசவர் என்னை இறுக கட்டி தழுவி "தம்பி! இன்று முதல் உன் பெயர் நிஜலிங்க சிக்கையா" என்றார். இவரை அழிக்க வந்த நான் இவரிடம் என்னை இழந்து நின்றேன்".

இப்படி சிக்கைய்யா சொல்ல சொல்லவே, ஒரு தம்பதியினர் அந்த அனுபவ மண்டபத்தின் முன்னே வந்து நின்றனர். அவர்களை பார்த்தவுடன் சிக்கைய்யா முகம் சுருங்கி வேர்த்தது. அடியார் கூட்டமும் என்ன அசம்பாவிதமோ என்று மொத்தமாக திரும்பியது. (தொடரும்)



Please Renew / Start your Subscription

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .

உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள் | |
|---|---|
| ஏகாதசி | ஜூலை 4,19 ஆகஸ்டு 2, 17 |
| ஜூன் 28 | கொடுங்கையூர் |
| ஜூன் 30 | ராணிப்பேட்டை |
| ஜூலை 6 | முடிச்சூர் விவேகானந்தா பள்ளி |
| ஜூலை 14 | மணிமங்கலம் கஜலஷ்மி நகர் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



Please Renew / Start your Subscription